**பத்திரிக்கைசெய்தி**

**மாவட்டஆட்சித்தலைவர் அலுவலகம்,நாகர்கோவில்**

H/8105/2020 நாள்:19.07.2021

கன்னியாகுமரி மாவட்டத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய மாவட்ட ஆட்சித்தலைவரின் செய்திக்குறிப்பு:-

தமிழக அரசின் உத்தரவின் படி முழு ஊரடங்கு 19.07.2021 முதல் 31.07.2021 காலை 6.00 மணி வரை சில தளர்வுகளுடன் மேலும் ஒரு வார காலத்திற்கு நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ளதால் அரசு அனுமதித்துள்ள தளர்வுகளுடன் கன்னியாகுமரி மாவட்டத்தில் 31.07.2021 வரை முழு ஊரடங்கு கடைப்பிடிக்கப்படும். இதில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட கீழ்க்கண்ட செயல்பாடுகள் மட்டும் முழுமையாக அனுமதிக்கப்படுகிறது. சில சேவைகள் அனுமதிக்கப்படவில்லை. அதன் விபரம் பின்வருமாறு.

**I-முற்றிலும் அனுமதிக்கப்படாத சேவைகள்**

1) மாநிலங்களுக்கு இடையேயான பொது மற்றும் தனியார் பேருந்து போக்குவரத்து அனுமதிக்கப்படாது.
2) சினிமா தியேட்டர்கள் மற்றும் மல்டிபிளக்ஸ் (Multiplex) செயல்பட அனுமதிக்கப்படாது.
3) அனைத்து பார்கள் செயல்பட அனுமதி இல்லை.
4) நீச்சல் குளங்கள் அனுமதிக்கப்படாது.
5) சமுதாயம்/அரசியல் கூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதி இல்லை.
6) பொழுது போக்குகள்/விளையாட்டு/ கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு அனுமதி இல்லை.
7) பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் செயல்பட அனுமதி இல்லை.

**II -நிபந்தனையுடன் அனுமதிக்கப்படும் சேவைகள்**

1. கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போது நீட்டிக்கப்பட்டுள்ள முழு ஊரடங்கின் படி திருமண நிகழ்வுகளில் 50 பேர் வரை கலந்து கொள்ள அனுமதிக்கப்படும்.

2. இறப்பு நிகழ்சியில் 20 நபர்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**III புதிதாக அனுமதிக்கப்படும் சேவைகள்**

1. தொழில் பயிற்சி நிலையங்களான ITI & Industrial Schools Type writing/Short hand Technical நிறுவனங்கள் 50 சதவீத மாணவர்களுடன் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி அனுமதிக்கப்படும்.

2. ஆசிரியர்கள் மாணவர் சேர்க்கை, புத்தக விநியோகம், பாடத்திட்டங்கள் தயாரித்தல் உள்ளிட்ட நிர்வாக பணிகள் தொடர்பாக பள்ளியில் பணியாற்ற அனுமதிக்கப்படும்.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசாரிபள்ளம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும், களப்பணியாளர்கள் மூலமாகவும், சோதனைச்சாவடிகள் மூலமாகவும் இதுவரை 8,66,351 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தற்போது மொத்தம் 166 பேர் கொரோனா சிகிச்சையில் உள்ளனர். இதில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் 37 பேரும், கோவிட் கவனிப்பு மையங்களில், தனியார் மருத்துவமனைகளில் 129 பேரும் சிகிச்சையில் உள்ளனர்.

- 18/07/2021 அன்று 24 நபர்களுக்கு கொரோனா நோய்த்தோற்று ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மொத்தம் 57,632 பேர் இதில் 55,397 பேர் முற்றிலும் குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர்.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்று (19.07.2021) முதல் கட்ட தடுப்பு மருந்து 7,473 நபர்களுக்கும், இரண்டாம் கட்ட தடுப்பு மருந்து 1976 நபர்களுக்கும் ஆக மொத்தம் 9,449 நபர்களுக்கு கொரோனா தடுப்பு மருந்து செலுத்தப்பட்டுள்ளது. மொத்தமாக இதுவரை முதல் கட்ட தடுப்பு மருந்து 3,64,043 நபர்களுக்கும், இரண்டாம் கட்ட தடுப்பு மருந்து 78,620 நபர்களுக்கும் செலுத்தப்பட்டுள்ளது
- கன்னியாகுமரி மாவட்டத்தில் முககவசம் அணியாதது மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றாதது ஆகிய காரணங்களுக்காக இன்று மட்டும் 153 நபர்களுக்கு அபராதமாக ரூபாய் 30,900 வசூலிக்கப்பட்டுள்ளது.இதுவரை மொத்தம் 98,513 நபர்களுக்கு அபராதமாக ரூபாய் 2,19,05,370/- வசூலிக்கப்பட்டுள்ளது.

மாவட்டஆட்சித்தலைவர்
கன்னியாகுமரிமாவட்டம்.